# வழிகாட்ட வா

ராகம்: ப்ருந்தாவன சாரங்கா, தாளம்: ஆதி
இயற்றியவர்: தங்கம் பரமேஸ்வர**ன்**

## பல்லவி

வழி காட்ட வா வாஸு தேவனே
வேதங்கள் வாழ்த்திடும் வித்தகனே
சிறியவர்க்கும் பெரியவர்க்கும் உனை மறந்தவர்க்கும்

## அனுபல்லவி

கரிராஜன் இன்னலைத் தவிர்த்தவனே
கௌரவர் சுய நலம் அழித்தவனே
கீதாசார்யனே கண்ணனே மணி வண்ணனே

## சரணம்

மனமென்னும் கோவிலில் அமர்ந்தருள்வாய்
மார்க பந்துவாய் எழுந்தருள்வாய்

குசேலன் குறை தீர்த்த நண்பனே
கோகுல பாலரின் அன்பனே
சாரங்க பாணியே ஞானியே விஞ்ஞானியே

©Copyright 2001-2015, Thangam Parameswaran, Orleans Ontario Canada